பதிவு எண்: M. 6311 ★ டெலிபோன்: 81331 ★ ஸ்தாபிதம்: 1953 ★ விலை 7 காசு ★ இலவசமாக 10 பக்கம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா.செழியன்

மலர்: 20] சென்னை: புரட்டாசி 21 (7—10—72) சனி | வெளியூர்: புரட்டாசி 22 (8—10—72) ஞாயிறு [இதழ்: 95

மாநாடுகள் — கருத்தரங்குகள் செலவில் சிக்கனம்

தமிழக அரசு நிர்ணயம்

திருச்சி, அக். 7—

" அரசாங்க ஆதரவில் நடைபெறும் கருத்தரங்குகள் அல்லது மாநாடுகளுக்கு ரூ. 1,500-க்கு மேல் செலவாகக் கூடாது" என்று தமிழக அரசு நிர்ணயித்திருக்கிறது.

"பல்வேறு துறைகள் தங்கள் ஆதரவில் நடத்தும் கருத்தரங்குகள், மாநாடுகள் ஆகியவைகளுக்குச் சிறப்பு மலர்கள் வெளியிடுதல் --

(4-ம் பக்கம் பார்க்க)

குறைகூறுவோருக்கு அறைகூவல்

ஏழைகள் உள்ளத்தைத் தொடும் கழக அரசின் திட்டங்களைப்போல் வேறு எந்த மாநிலத்தில் உண்டு?

சாதனைகளைக் கண்டு வேதனைப்படுவதேன்?

முதலமைச்சர் கலைஞர் எழுப்பும் வினா

சென்னை, அக். 7—

" திராவிட முன்னேற்றக் கழகம் எவ்வளவோ சோதனைகளைச் சந்தித்திருக்கிறது; ஒவ்வொரு சோதனையிலும், நெருப்பிலிட்டுப் புடம்போட்டு எடுக்கப்பட்ட தங்கத்தைப்போல் இருந்ததே தவிர, 'சோதனையில் தவறிவிட்டது' என்ற வரலாறு அதற்கு இருந்ததே கிடையாது!

" தி. மு. கழகத்தின் -- அரசின் சிறந்த கொள்கைகளுக்காக -- சாதனைகளுக்காக மக்கள் நம்மை ஆளும் கட்சியாகவோ -- எதிர்க் கட்சியாகவோ கருதாமல் -- பிரித்துப் பார்க்க விரும்பாமல், 'இந்தக் கட்சி நம்முடைய குடும்பக் கட்சி' என்று கருதுகிறார்கள்; அந்த உணர்வுடன் மக்கள் வருகிறார்கள் -- வழியெல்லாம் நின்று வாழ்த்துகிறார்கள்; 'அண்ணா வாழ்க -- தமிழக அரசு வாழ்க' என்று முழக்கமிட்டு வரவேற்கிறார்கள் என்றால் என்ன காரணம்?— நாமெல்லாம் அமைச்சர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், மக்களுக்காகவே பாடுபட இந்த உடலை எடுத்தவர்கள் என்ற முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றவர்கள் -- என்பதால்தான்!

" மக்கள் உள்ளத்தில் வீற்றிருக்கும் தி. மு. கழகம் இன்று ஆட்சிப் பொறுப்பிலிருக்கிறது; மக்கள் இதைத் தங்கள் கழகமாக ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள்; அப்படிப்பட்ட கழகத்திற்கும் -- கழக ஆட்சிக்கும் இன்றுபோல் என்றும் ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், கோட்டூர்புரம் கலைவாணர் என்.எஸ்.கே. மன்றத்தின் சார்பில் நடைபெற்ற பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவில் உரையாற்றுகையில் தெள்ளத் தெளிவுற விளக்கிக் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு தோழர் கே. வரதன் தலைமை தாங்கினார்.

தோழர்கள் செ. கந்தப்பன் எம்.எல்.ஏ., மாநகராட்சி உறுப்பினர்கள் சா. கணேசன், மழை வண்ணன், வி. லோகநாதன், சி. வி. சிட்டிபாபு, ஆர். டி. பாஸ்கரன், ஸ்ரீதரன், செ. மோகனபாபு, கோ. அய்யாவு மற்றும் எம். குமார், கோ. சி. மூர்த்தி, அரிகிருஷ்ணன், கமலக்கண்ணன், எம். பாலன், செயராமன் ஆகியோர் உரையாற்றினர்.

முதலமைச்சர் கலைஞர்

இறுதியில், கழகத் தலைவர் அவர்கள் உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:—

" நாம் ஆட்சியில் அமர்ந்திருப்பது -- பல்வேறு சாதனைகளை நாம் உருவாக்கி வருவதைக் கண்டு எதிர்க் கட்சியினர் பலரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

நாம் பணக்காரர்களின் முகங்களை மறந்து விடுவோமே தவிர, பாட்டாளித் தோழர்களை என்றென்றைக்கும் மறக்கமாட்டோம்!

அயோத்தியாகுப்பம் -- நொச்சிக்குப்பம் -- கோட்டூர்புரம்போன்ற பகுதிகளிலெல்லாம் குடிசைகள் கோபுரமாக எழுகின்ற காட்சியினைக் காண்கிறீர்கள்; இவைகளெல்லாம் 1952-லோ, 1957-லோ, 1962-லோ உண்டா? அண்ணா ஆட்சிக்கு வந்த பிறகு அல்லவா -- அவர் காட்டுச்சென்ற வழியில் அல்லவா அந்தக் காரியங்களெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன?

இப்படிப்பட்ட அரசை மாற்றிவிட வேண்டுமென்று சிலர் விரும்புகிறார்கள்.

'நான் முதலமைச்சராக இருந்தபோது என்னவெல்லாம் செய்தேன் தெரியுமா' என்று கேட்கும் 'பெருந்தலைவர்'; என்ன செய்தார் -- குடிசைகளை அப்படியே வைத்து அழகு பார்த்துக் கொண்டிருந்தார்!

தமிழ்நாட்டில் பார்வையற்றிருக்கின்ற பத்து இலட்சம் பேர்களில் இந்த ஆண்டு மட்டும் ஓர் இலட்சம் பேர்களுக்குக் கண்ணொளி தருவதென்று திட்டமிட்டு, ஜூன் மாதத்திலிருந்து இந்த அக்டோபருக்குள் ஏறத்தாழ 20,000 பேருக்குக் கண்ணொளி தந்திருக்கிறது கழக அரசு! காங்கிரசு இப்படி செய்ததுமில்லை -- செய்ய நினைத்ததும் இல்லை!

இப்படிச் செய்கின்ற காரியங்களை மக்கள் பாராட்டுகிறார்கள் என்பதால், அவர்களுக்கு வேதனை ஏற்படுகிறது!

நாளைய தினம் மதுரை மாவட்டம் மேலூரில் பல்லாயிரக்கணக்கானவர்களுக்குக் கண்ணொளி தரப்பட்டு -- இலவசமாகக் கண்ணாடி வழங்க இருக்கிறோம்; அந்த நிகழ்ச்சி முடிந்து பல ஆயிரக் கணக்கானவர்களுக்கு நிலப் பட்டாக்களும் -- வீட்டு மனைப் பட்டாக்களும் வழங்கப்படவிருக்கிறது.

மறுநாள் பரமக்குடியில் பல்லாண்டுக் காலமாக அந்தப் பகுதி மக்கள் கேட்டுவந்த குளமகோவை பட்டாக்கள் -- 50,000-த்திற்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கப் போகிறோம்.

அறைகூவல் விட்டுச் சொல்கிறேன் -- 'இப்படிப்பட்ட சாதனைகள் இந்தியாவில் வேறு எங்கும் கிடையாது' என்று! ஒருநாள் முழுவதும் சொல்லத்தக்க அளவுக்கு சாதனைகளைச் செய்திருக்கிறோம்!

எங்களின் செயல் திட்டங்கள் ஏழைகளைத் தொடுகின்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

'படி'க்கச் சொன்னவர் எதனைச் சொன்னார்?

'குடி'க்கச் சொன்னவர் எந்த நிலையை உருவாக்கினார்?

சென்னை, அக். 7—

" இட்டோரு சிண்டிகேட்டிலுள்ளவர்கள், ஒரே பல்லவியைப் பாடுகிறார்கள்; 'படிக்கச் சொன்னார் காமராசர் — குடிக்கச் சொன்னார் கருணாநிதி' என்கிறார்கள்!

படிக்கச் சொன்னார் காமராசர் -- எதை -- மஞ்சள் பத்திரிகையை!

குடிக்கச் சொன்னார் கருணாநிதி — எதை — காக்கப்பட்ட குடிதண்ணீரை! இதுதான் உண்மை!

காமராசர் ஆட்சிக் காலத்திலும் — 1967-க்கு முன்பும் கல்லூரியில் படித்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 80 000; ஆனால் இன்று 183,000 பேர் கல்லூரியில் படிக்கிறார்கள்; இது, 'படிக்க வேண்டாம்' என்று நாங்கள் சொன்னதற்கு அடையாளமா? மாணவர்களை, 'படிக்காதே' என்று சொன்னோமா? பள்ளிக்கூடங்களையெல்லாம் மூடிவிட்டோமா?

குடிக்கச் சொன்னதாகச் சொல்கிறார்கள்; 'திருட்டுத்தனமாகக் குடிக்காதே — அதனால் பணம் யார் யாருக்கோ போகிறது — குடிப்பதை நிறுத்த முடியாவிட்டால் பகிரங்கமாகக் குடி — அதனால் அரசாங்கத்தின் பெட்டிக்குப் பணம் வரட்டும்' என்கிறோம்!

இன்று இதன்மூலம் அரசுக்கு ரூ. 40 கோடி வருமானம் வருகிறது; முன்பு ரூ. 30 கோடி கிடைத்தது — அரசுக்கு அல்ல -- 'மாமூல்' வாங்குகிறவர்கள் — அதிகாரிகள் ஆகியோரின் 'பாக்கெட்'டுக்கும், கள்ளச்சாராயம் காய்ச்சுவோருக்கும் கிடைத்தது; இன்று அந்தப் பணம் நேர்மையாக அரசாங்கத்திற்கு வருகிறது; பல நல்ல காரியங்களுக்கு அந்தப் பணத்தைப் பயன்படுத்த முடிகிறது!"

-- கழகத் தலைவர் கலைஞர்

(கோட்டூர்புரம் என். எஸ். கே. மன்றச் சார்பில் நடைபெற்ற அண்ணா பிறந்த நாள் விழாவில்)

புண்பட்ட நேரத்திலும் கலைவாணர் பண்பாட்டை இழக்கவில்லை

ஏழை எளியவர்களுக்காக அவர் ஏற்றுக்கொண்ட சிரமங்கள் ஏராளம்--பட்டபாடுகள் அளவற்றது

'பெருந்தன்மை'க்கு உறைவிடமாகத் திகழ்ந்தார் -- பணியாற்றினார்

சென்னை, அக். 7—

" கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் என்றென்றும் நம் உள்ளத்தில் வாழ்கின்ற அளவுக்குப் பல நல்ல பணிகளைத் தமிழகத்திலே நடத்திவிட்டுப் போயிருக்கிறார்; 'கலையின் மூலமாக அருமையான [illegible]சிக் கருத்துக்களை எடுத்துச் சொல்ல முடியும்' என்கின்ற ஒரு புதிய சகாப்தத்தைத் தமிழகத்தில் ஏற்படுத்திய பெருமை அவருக்குத்தான் உண்டு!

அவர் நடிக்கின்ற புராணப் படமானாலும்--வரலாற்றுப் படமானாலும்--சமூகப் படமானாலும்--எந்தப் படமானாலும், அதிலே கலைவாணருடைய முத்திரையைப் பார்க்கலாம்; அந்த முத்திரை, திராவிட இயக்கக் கருத்துக்களைச் சார்ந்ததாகவும் -- சுயமரியாதை எண்ணங்களைப் பிரதிபலிப்பதாகவும் இருக்கும்; சாதி--மத--மூடநம்பிக்கைகளை நகைச்சுவை மூலம் வேரறுப்பதற்குக் கலைவாணர் கையாண்ட முறைகளை அதிலே காண முடியும்.

கலைவாணர் மறைந்து பல ஆண்டுகளாகிவிட்டதால், இன்றைய இளம் தலைமுறையினருக்கு நாம் நினைவுபடுத்தக்கூடிய அளவிற்கு நிலைமை இருக்கிறது; இன்று, 'நகைச்சுவை' என்ற பெயரால் எத்தனையோ சுவைகளைக் காண்கிறோம்; ஓடுகின்ற நேரத்தில் விழுந்து விடுவதும் --காதைப் பிடித்துத் திருகும்போது காது கையோடு வந்துவிடுவதும்தான் நகைச்சுவையாக இப்போது இருக்கிறது; ஆனால், கலைவாணருடைய நகைச்சுவை--அவர் ஏற்றுக்கொண்ட பாத்திரத்தின் மூலம் மக்கள் உள்ளத்தில் பதிந்து சுயமரியாதை எண்ணங்களை--தமிழர்களை வாழவைக்கும் கருத்துக்களை--

(4-ம் பக்கம் பார்க்க)

கல்வியால் பெற்ற பயன் நாட்டுக்குக் கிட்ட வேண்டாமா?

செலவிட்ட பணத்தைக் கணக்கிட்டுப் பாருங்கள்

தமிழ்நாடு மாணவ--மாணவி[illegible]ருக்குக் கலைஞர் கனிவுரை

சென்னை, அக். 6—

சென்னைப் பல்கலைக் சழகத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கணிதத் துறை இராமானுசம் ஆராய்ச்சிக்கூடத்தையும் -- பல்கலைக் கழகம் உட்ட மேற்படிப்புத் துறை மாணவியர் உணவு விடுதியையும் முதலமைச்சர் கலைஞர் திறந்து வைத்தார்.

சென்னைப் பல்கலைக் சழகத் துணைவேந்தர் நே. து. சுந்தரவடிவேலு அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் தமிழக அரசு கல்வித் துறைக்கு ஆற்றியுள்ள அரும் பணிகளையும், சலுகைகளையும் குறிப்பிட்டார்.

விழாவுக்குப் பல்கலைக் கழக இணைவேந்தரும் -- கல்வி அமைச்சருமான நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமைதாங்கினர்.

கட்டடங்களைத் திறந்து வைத்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"சுமார் ரூ. 11 இலட்சம் செலவில் கட்டப்பட்ட இரண்டு கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இதற்கான இடத்தினை அரசு வழங்கியுள்ளது.

ரூ. 5 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவியர் விடுதியில் 48 மாணவியர் தங்கிப் படிப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மாணவிகள் 48 பேர்தான் என்கின்ற கணக்கையும் -- அதற்கு ஆகியிருக்கின்ற செலவு ரூ. 5 இலட்சம் என்கின்ற கணக்கையும், கணித மேதையின் ஆய்வுக் கூடத்தைத் திறக்கும் இந்த நேரத்தில் நாமோ மற்றவர்களோ சிந்திக்காமல் இருக்க முடியாது.

இணைவேந்தர் நாவலர் அவர்கள், ஒரு மாணவனுக்கு -- அவனுடைய படிப்புககாக ஆகின்ற செலவு எவ்வளவு என்பதை எடுத்துச் சொன்னர்; [illegible] படித்த கணக்கு மாத்திரம[illegible] பார்க்க வேண்டிய கணக்கு ஆகும்.

ஏன் இதைச் சொல்கிறேனென்ருல், 'இப்படி ஒரு சமுதாயத்திற்காக பொறுப்புகளை ஏற்றுக் கொண்டிருக்கின்ற அரசாகட்டும் -- அல்லது தனி நிறுவனங்கள் ஆகட்டும் -- ஒரு தனி மனிதனுக்காகவும் மாணவனுக்காகவும் செலவிடும் தொகைக்கேற்ற பயனை ஒவ்வொரு மாணவனிடமும் இந்த நாடும் சமுதாயமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது என்பதை மறந்து விடக் கூடாது' என்பதற்காகத்தான்.

படிப்பது -- பல்வேறு பயிற்சிகளைப் பெறுவதெல்லாம், அதனைப் பெற்றவர்கள் மூலம் இந்த நாட்டிற்கு -- எதிர்காலத்திற்கு என்னென்ன கிடைக்கின்றன என்பது பற்றி ஆராயப்பட வேண்டியிருக்கிறது.

ஏறத்தாழ கல்விக்காக ரூ. 100 கோடி செலவழிக்கிறேமென்ருல், அதனுடைய உடனடியான விளைவுகளை அப்போதே பார்க்க முடியாது; இன்றிருக்கின்ற கல்வி முறையைப் பற்றி இன்னும் 15 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு உள்ள சமுதாயத்தினர் கணக்குப் போடுவார்கள்; அவர்களுக்கு நாம் பதில் சொல்லவேண்டிய கட்டத்தில் இருக்க வேண்டியவர்கள்.

நேற்று ஒரு காரியம் நடந்து -- அதன் விளைவுகளைப் பார்த்து -- நாளைக்கே அதன் வெற்றியைக் கொண்டாடுகின்ற வகையில் அமைந்ததல்ல--கல்வியும் அதன் பயிற்சியும்; இன்று அதற்காக எடுத்துக்கொள்ளும் முயற்சிகள், பத்தாண்டுக் காலத்திற்குப் பிறகு கணக்குப் பார்க்கப்பட வேண்டியவைகளாக இருக்கின்றன.

ஆகவே, நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் எச்சரிக்கையாகவும் -- பொறுப்போடும் -- எதிர்காலத்தைப் பற்றிய கணக்கை உள்ளத்தில் பதிய வைத்துக் கொள்ளப்பட வேண்டியவைகளாகவும் இருக்கின்றன.

இது அரசின் கடமை மாத்திரமோ -- பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் துணைவேந்தர், பேராசிரியர்களுடைய கடமை மாத்திரமோ அல்ல; முழுக்க முழுக்க அந்தக் கடமை, பயிலுகின்ற மாணவர்களைப் பொறுத்திருக்கிறது.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு எந்தெந்த வகையில் எல்லாம் கல்லூரிக் கல்வி வளர்ந்திருக்கின்றது என்பதற்கான சான்றுகளை துணைவேந்தர் எடுத்துச் சொன்னர்.

1967-ம் ஆண்டில் கல்லூரி மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 80,000 என்பதும் 1971—72-ம் ஆண்டின் கணக்குப்படி 1,88,000 பேர் என்பதும் சாதாரணமான கணக்கல்ல; இந்த 1,88,000 பேரில் மகளிர் மட்டும் 48,000 பேர் என்பதை அறிகின்ற நேரத்தில் மகிழ்ச்சியடைகிறேன்.

ஒவ்வொரு மாணவனுக்கும் அரசின் சார்பில் ஆகின்ற செலவை [illegible]லர் எடுத்துக் காட்டினர்; அரசின் செலவு மட்டுமல்ல -- கிராமத்தில் இருக்கின்ற சாதாரண விவசாயிகள் தங்கள் குழந்தைகளைக் கல்லூரிக்கு அனுப்பி வைத்துவிட்டு -- 'நம்முடைய மகன் எதிர்காலத்தில் நம்முடைய குடும்பத்திற்கு விளக்காகத் திகழ்வான் -- சிறந்து விளங்குவான்' என்று கனவு கண்டு கொண்டு, தங்கள் வாயைக் கட்டி -- வயிற்றைக் கட்டிச் சேர்த்துவைத்த தொகையையும் பற்றி நாம் எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

இந்தப் பொறுப்பைத் தட்டிக் கழிக்காமல், பெற்றோர் மகிழத்தக்க அளவிற்கு -- நாடும் சமுதாயமும் போற்றத்தக்க அளவிற்கும் ஒவ்வொரு மாணவனும் வாழ்க்கையை அமைத்துக் கொண்டாக வேண்டும்; ஒவ்வொருவரும் வாழ்க்கையை அறைகூவலாக ஏற்றுக் கொள்ள வேண்டும்; 'இதுதான் வாழ்க்கை' என்று இருக்கக் கூடாது; வாழ்க்கையை ஒரு பிரச்சினையாக அணுகியாக வேண்டும்.

படிக்கின்ற நேரத்தில், எதிர்கால வேலையைப் பற்றியும் கவலைப்படாமல் -- தங்களை வேலைக்கு உரியவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென்ற கவலையுமில்லாமல், வேலை நிறுத்தத்திற்கு தங்களை கதாநாயகர்களாக ஆக்கிக் கொள்வதில் தலைசிறந்தவர்களாக மாணவர்கள் இருக்கிருர்கள்.

மாணவர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டால், தங்கள் வாழ்க்கையில் கற்றுக்கொள்ள வேண்டிய நாட்களை — மீண்டும் திரும்பி வராத பல நாட்களை இழந்துவிடுகிருர்கள் என்பதை உணர வேண்டும்.

'கல்வியின் தரத்தைப் பற்றிப் பலர் பலவிதமாகப் பேசுகிருர்கள்' என்று நாவலர் அவர்கள் சொன்னர்கள்; நாமும், 'கல்வியின் தரம் உயரவேண்டும்' என்று எண்ணுவதில் யாருக்கும் சளைத்தவர்களல்லர்!

கல்வியின் தரம் இன்னும் வளமானதாக--பயனுள்ளதாக அமைந்திட வேண்டுமென்பதற்கான முயற்சிகளை நானும் -- நாவலரும் -- துணைவேந்தரும் --கல்வியாளர்களும் தொடர்ந்து எடுத்துக் கொண்டு வருகிருேம்.

கல்வி என்பது, 'தகுதி -- திறமை' என்ற அடிப்படையில் அமைந்திட வேண்டுமென்பது, கேட்பதற்கு இனிய கீதமாக இருந்தாலும்கூட, குறிப்பிட்ட ஒரு சாரார்தான் அந்தத் தகுதியை -- திறமையைப் பெற்றிருக்கிருர்கள் என்ற மாயையிலிருந்து நாம் விடுபட வேண்டும்.

வசதி--வாய்ப்பு யாருக்கு அளிக்கப்பட்டாலும், அவர்கள், தகுதி -- திறமையைப் பெற்றே தீருவர்; சாதி--சமய வேறுபாடின்றி எந்த மாணவனுக்கு வசதி -- வாய்ப்பு கிடைத்தாலும், அவர்கள், தகுதி--திறமையை நிச்சயமாகப் பெறமுடியும்; அதற்காகத்தான், பின்தங்கிக் கிடங்கவர்களுக்குத் தகுதி--திறமை வந்து சேர வேண்டுமென்பதற்காகப் பல சலுகைகள் தமிழ்நாட்டில் கல்வித் துறையில் பல ஆண்டுக் காலமாக அளிக்கப்பட்டு வந்திருக்கிறது; அதைத் தொடர்ந்து விரிவுபடுத்தி மேலும் உற்சாகத்தோடு அளித்துக் கொண்டு வருகிருேம்.

இவ்வளவு சலுகைகள் அளித்து வருகின்ற இந்த அரசின் பொறுப்புக்களுக்கு மதிப்பளிக்கின்ற வகையிலும் -- பல்கலைக் கழகத் துணைவேந்தர், கல்வியாளர்கள், பேராசிரியர்கள், எதிர்கால சமுதாயத்தைப் பற்றிக் கவலைப்பட்டு[illegible]காண்டிருப்பவர்கள் அனைவரும் மனம் மகிழத்தக்க வகையிலும் மாணவர் சமுதாயம் நடந்துகொள்ள வேண்டுமென்பதை என் வேண்டுகோளாக இந்த விழாவில் தெரிவித்துக் கொள்கிறேன்."

ஆக்கபூர்வ வழி வகைகளை எடுத்து கூறட்டும்

குறை கூறுவோருக்கு நாவலர் அறைகூவல்

விழாவிற்குத் தலைமைதாங்கிய கல்வியமைச்சர் நாவலர் அவர்கள் பேசுகையில் கூறியதாவது :—

"கணிதத்துறையில் ஆற்றலை வெளிப்படுத்துகின்ற அளவுக்கு அறிவுத் திறனல் -- ஆற்றல் திறனல் பெயர் பெற்றுத் திகழ்ந்த மறைந்த கணித மேதை இராமனுசத்தின் பெயரால் இந்த ஆராய்ச்சிக்கூடம் அமைந்திருப்பது எல்லா வகையிலும் பொருத்தமுடையதாகும்.

ஒரு பல்கலைக் கழகத்தின் பெருமையினைப் பார்க்குங்கால், அந்தப் பல்கலைக் கழகத்திலிருந்து அறிவுத் திறன் பெற்றவர்கள் -- ஆற்றல் திறன் பெற்றவர்கள் எவ்வளவு பேர் பல்கலைக் கழகத்தை விட்டு வெளியே வந்தார்கள் என்று கணக்கிட்டுப் பார்க்க வேண்டுமே தவிர, அங்கு கட்டப்பட்டுள்ள கட்டடங்களைப் பார்த்துக் கணக்கிடக்கூடாது.

மாணவர்களை, அறிவுத் திறன் -- ஆற்றல் திறனில் வல்லவர்களாக ஆக்க வேண்டிய பொறுப்பு பல்கலைக் கழகத்தைச் சார்ந்ததாகும்.

வேறு பல்கலைக் கழகங்களில் படிக்கும் மாணவர்களையும் மிஞ்சுகின்ற அளவுக்குத் தமிழகத்தில் உள்ள மாணவர்களை உருவாக்க வேண்டிய முக்கிய பொறுப்பு இங்குள்ள பேராசிரியர்களைச் சார்ந்திருக்கிறது.

'கல்வியின் தரம் குறைந்துவிட்டது' என்று சொல்லுவது, சென்னைப் பல்கலைக் கழகத்தை மட்டுமே சார்ந்ததல்ல; அப்படித் தரம் குறைந்துவிட்டது என்று சொல்லுகிறவர்கள், அதற்கு ஆக்கபூர்வமான வழிவகைகளை அரசுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

எதிர்காலம் மிகச் சிறப்புற்றுத் திகழ வேண்டுமென்பதற்காகத்தான், மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும், இப்போது டாக்டர் கலைஞரை முதலமைச்சராகக் கொண்டிருக்கின்ற அமைச்சரவையும் ஏராளமான பணத்தை கல்விக்காகச் செலவழித்து வருகிறது."

கிராமங்களில் பொதுக் களம்

புறம்போக்கு நிலம் ஒதுக்கப்படும்

திருச்சி, அக். 6—

கதிரடிக்கும் களங்கள் இல்லாத கிராமங்களில் அனைவருக்கும் பொதுவான களங்களை ஏற்படுத்துவதற்குத் தமிழ்நாடு அரசு திட்டம் வகுத்துள்ளது.

இத்தகைய கிராமங்களில், புறம்போக்கு நிலத்தில் இடம் ஒதுக்கி -- கதிரடிக்கும் களங்களை அமைக்கலாம் என்றும், கிராமத்தில் உள்ள அனைவரும் இந்தக் களங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அரசு யோசனை கூறியிருக்கிறது.

இவ்வாறு புறம்போக்கு நிலங்களை ஒதுக்குவதற்கு ஊராட்சி மன்றங்களுக்கும் அனுமதி அளிக்கும்படி -- மாவட்ட கலெக்டர்களுக்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

சென்ற ஆண்டு திருச்சியில் நடைபெற்ற மாவட்டக் கலெக்டர்கள்--போலீசு அதிகாரிகள் மாநாட்டில் இந்த யோசனை தெரிவிக்கப்பட்டது.

இதன்பின், கிராமப்புற வளர்ச்சித்துறை இயக்குநரையும் -- வருவாய்த்துறை வாரியத்தையும் கலந்து ஆலோசித்து அரசு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

பம்பு செட்டுகளுக்கு மின்சார மோட்டார்

தஞ்சை விவசாயிகளுக்கு கடன் வழங்க ரூ. 70 இலட்சம்

தஞ்சை, அக். 6—

தஞ்சை மாவட்டத்தில் பம்பு செட்டுகளுக்கு டீசல் எஞ்சின்களைப் பொருத்துவதற்காக விவசாயிகளுக்கு கடன் வழங்குவதற்கு ரூ. 70 இலட்சம் அளவில் தமிழ்நாடு அரசு அங்கீகாரம் அளித்துள்ளது.

பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கோரி காத்திருக்கும் விவசாயிகளுக்கு இந்தக் கடன்கள் வழங்கப்படும்.

இந்த பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புத் தரப்படும்போது இந்த டீசல் எஞ்சின்களை அகற்றிவிட்டு அதற்குப் பதிலாக மின்சார மோட்டார்களைப் பொருத்தும் பணியை அரசாங்கமே இலவசமாகச் செய்து கொடுக்கும்; இந்தத் திட்டத்தினல் 20,000 விவசாயிகள் பயனடையக் கூடும்.

இத்தகவலை தஞ்சை மாவட்ட கலெக்டர் கே.ஏ. நம்பியார் நிருபர்களிடம் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது :—

"தஞ்சை மாவட்டத்தில் 13 பிர்க்காக்களில் வறட்சி நிவாரணப் பணிகளுக்கான உதவித் தொகையாக முதல் தவணையில் ரூ. 6 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தில் கோழி வளர்ப்புப் பண்ணைகளை அமைப்பதற்கு ரூ. 40 இலட்சம் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

திருவோணம் -- பேராவூரணி ஆகிய பகுதிகளில் திறந்த கிணறுகளைத் தோண்டுவதற்கு மானியம் அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது; இதன்படி, திருவோணத்தில் 1,980 கிணறுகளுக்கும், பேராவூரணியில் 7,760 கிணறுகளுக்கும் தலா ரூ. 500 வீதம் மானியம் வழங்கப்படும்."

பம்பாய்-- மான்கூர்டில் சிறப்புக் கலைநிகழ்ச்சி

பம்பாய் — மான்கூர்டு ஜனதா காலனி குடியிருப்போர் அனைத்து அரசியல் மற்றும் சமூக நலக் கூட்டணிக் குழுவின் வளர்ச்சி நிதிக்காக சிறப்புக் கலைநிகழ்ச்சி 16—10—72 மாலை 7-மணிக்கு ஜனதா காலனி நகராட்சி மன்றத் திடலில் இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் எம்.பி. அவர்களின் கண்ணகி வரலாற்று வில்லுப் பாட்டு நிகழ்ச்சி நடைபெறும்.

வறுமையும் அறியாமையும் ஒழிய வழி

காந்தியின் கொள்கைகளைக் கடைபிடிப்பது ஒன்றே!

கல்வியமைச்சர் நாவலர் விளக்கவுரை

சென்னை, அக். 7

"இன்றையத் தினம் ஏறத்தாழ 39 கோடி மக்கள் எழுத்தறிவு அற்றவர்களாயும், ஏறத்தாழ 22 50 கோடி மக்கள் ரூ. 25-க்குக் குறைவான வருமானம் உடையவர்களாகவும் இருப்பதாகக் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது.

"காந்தியார் கடைபிடித்த -- எடுத்துக் கூறிய வழி முறையில் நின்ருலன்றி இந்த நிலைமைகள் மாற்ற முடியாததாகிவிடும்"

என்று, கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சென்னை காந்தி மண்டபத்தில் -- காந்தியார் பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினர்.

'காந்தியாரும் ஒத்துழையாமையும்' என்ற தலைப்பில் கல்வியமைச்சர் நாவலர் பேசியதாவது :—

"இன்று தங்கள் தங்கள் கருத்துக்களுக்குத் தாங்களே வலிவு தேடிக்கொள்ளும் பலரை நாம் காண்கிருேம்; ஆனல் காந்தியாரின் கொள்கைகள், மற்றவர்கள் மத்தியில் தாமாகவே மதிப்பைப் பெற்றதை நாம் அறிவோம்; இதற்குக் காரணம், அவர் நடந்த அன்பு வழி -- அறிவு வழி -- பண்பு வழி -- கொண்ட கொள்கையில் உறுதி ஆகியவைகள்தாம்!

பாரதியார் சொன்னதுபோல, நாட்டிலெல்லாம் தாழ்வுற்றிருந்த இந்த நாட்டை -- வறுமை மிஞ்சிக் கிடந்த இந்த நாட்டை -- விடுதலை தவறிக் கெட்டிருந்த இந்த நாட்டை --- பாழ்பட்டு நின்ற இந்த நாட்டை வாழ்விக்க வந்தவர்தான் அண்ணல் காந்தியடிகளாவார்; இருபதாம் நூற்ருண்டின் சிறந்த தலைவராக அவர் விளங்கினர்.

ஒருவர் மாடமாளிகையை -- கூட[illegible]கோபுரத்தை -- காடு கழனியை -- நகைநட்டுகளை -- பதவி பட்டங்களையெல்லாம் பெற்றுவிடலாம்; குறுக்கு வழியிலும் பெற்றுவிடலாம்; நேர்வழியிலும் பெற்றுவிடலாம்; ஆனல், ஒருவர் இதயத்திலே இடம் பெறுவதென்பது அவ்வளவு எளிதல்ல!

ஒருவனிடம் ஓர் இலட்சம் ரூபாயைத் தந்து, 'உன் இதயத்திலே எனக்கு இடம் கொடு' என்ருல், அவன் வைத்துக்கொள்ளுவான்; ஆனல் எப்படி -- உதட்டளவில் சிரித்தபடியே பணத்தை வாங்கிக்கொள்வானே தவிர, அவர் உள்ளத்துக்குள், 'இவன் அடித்த கொள்ளைக்கு ஓர் இலட்சம்தானு -- ஐந்து இலட்சம் ரூபாய் தரக் கூடாதா?' என்ற எண்ணம்தான் இருக்கும்.

ஆகவே, பணத்தின் மூலமோ -- செல்வாக்கின் மூலமோ ஒருவருடைய இதயத்தில் இடம் பிடிப்பதென்பது சாத்தியமல்ல!

அண்ணன் இதயத்தில் இடம் பெருத தம்பிமார்களை -- தம்பிமார்கள் இதயத்தில் இடம் பெருத அண்ணன்களை -- தனயன் இதயத்தில் இடம் பெருத தந்தைகளை -- தந்தைமார் இதயத்தில் இடம்பெருத தனயன்களை -- கணவனின் இதயத்தில் இடம் பெருத மனைவிமார்களை -- மனைவிமார் இதயத்தில் இடம் பெற முடியாத கணவன்மார்களை வீட்டுக்கு வீடு -- வீதிக்கு வீதி பார்க்கிருேம்!

இந்த நிலையில், 56 கோடி மக்களின் இதயத்தில் காந்தியார் இடம் பெற்றிருந்தாரேன்ருல், அந்தத் தகுதியை அவர் தமது அறிவுத் திறனல் -- ஆற்றல் திறனல்தான் பெற்ருர் என்பது தான் உண்மையாகும்.

'உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துளெல்லாம் உளன்' என்று வள்ளுவர் சொன்ன குறளின் இலக்கணத்திற்கேற்ற இலக்கியமாகத் திகழ்ந்தார் அவர்!

காந்தியடிகளாரின் பெருமையை இவ்வாறு விரிப்பின் பெருகும் -- தொகுப்பின் எஞ்சும்!

'பார்-அட்-லா' என்ற படிப்பை முடித்து விட்டு இந்தியாவுக்கு வந்தபோதும்சரி -- வழக்கறிஞர் தொழிலில் இறங்கியபோதும் சரி -- அவர் அரசியலில் நாட்டம் கொள்ளவில்லை!

வழக்கறிஞராகத் தென்னுப்பிரிக்காவுக்கு வழக்காடப் போன அவர், அங்கே இந்தியர்களுக்கு இழைக்கப்படும் அநீதி கண்டு, 'மக்களை மக்களாக வாழ வைக்க வேண்டும்' என்ற வேட்கை உணர்வுடன் 1915-ல் இந்தியாவுக்குத் திரும்பினர்.

அந்த நேரத்தில் இந்தியாவில் இரு பிரிவினர் இருந்தனர்; ஒரு சாரார், 'வெள்ளையனுக்கு எதிர்ப்புக் காட்டக்கூடாது' என்று ஆதரவாக இருந்தனர் -- இவர்கள் மிதவாதிகள்; இன்னெரு சாரார், 'வன்முறையில் ஈடுபட்டாலன்றி வெள்ளையனை விரட்ட முடியாது' என்ற கருத்தோடு இருந்த தீவிரவாதிகள்!

காந்தியார் இந்த இரு சாராருடனும் ஒத்துப் போகாமல், இடையே புதியதோர் வழியை -- அறப்போர் முறையைக் கண்டுபிடித்தார்; அதுதான் ஒத்துழையாமை இயக்கம்.

'வெள்ளையருடன் ஒத்தும்போகவும் கூடாது -- அவர்கட்கு எதிராக வன்முறையில் ஈடுபடுவதும் ஆகாது; உண்ணுநோன்பு இருந்து நம்மை நாமே வருத்திக் கொள்வதன்மூலம் மக்களின் ஆதரவைத் திரட்டிக் கொள்கையில் வெற்றி காணவேண்டும்' என்பதுதான் அவருடைய நோக்கமாகும்; அன்றிருந்த பல அரசியல்வாதிகளும் -- பத்திரிகை ஆசிரியர்களும் இதைக் கேலி செய்தபோதும் அவர் பொருட்படுத்தாமல், கொண்ட கொள்கையில் உறுதியோடு இருந்தார் -- வென்ருர்!

அந்த இலட்சியத்துடன் போராடிய போதும்கூட, சிலரால், 'சௌரி சௌரா' என்ற இடத்தில் போலீசு நிலையத்திற்குத் தீ வைக்கப்பட்டது; உடனே அவர், 'தொண்டர்களை உருவாக்கத் தவறிவிட்ட இமாலயத் தவற்றைச் செய்துவிட்டேன்; ஆகவே போராட்டத்தை நிறுத்திவிட்டேன்' என்று அறிக்கை விட்டார் காந்தியடிகள்!

'தொண்டன் என்பவன் சட்டத்தை மதிக்க வேண்டும்; உப்புச் சட்டத்தை மீறு என்ருல், ஊர்ச் சட்டத்தையெல்லாம் மீறக்கூடாது; சொன்னதை மட்டும் செய்பவனையே தொண்டனுக ஏற்பேன்' என்ருர் அவர்!

எல்லாச் சட்டத்தையும் மீறி இன்று பலர் போராட்டத்தில் ஈடுபடுவதைப் பார்க்கிருேம்; 'எப்படியும் சாக விடமாட்டார்கள்' என்ற நம்பிக்கையில், பகலில் மட்டும் -- அதுவும் சோறு மட்டும் சாப்பிடாமல் உண்ணுநோன்பு இருப்போரையும் காண்கிருேம்!

அறப்போராட்டம் -- என்று தொடங்கி அராஜகப் போராட்டம் நடத்துவோரையும் காண்கிருேம்!

வீழ்ச்சியுற்றிருக்கின்ற சமுதாயத்தை எழுச்சி பெறச் செய்ய வேண்டுமானல், இந்த நிலை மாற வேண்டும்!"

தொழில் நுட்பப் பட்டதாரிகளுக்கு வேளாண்மைத்துறைப் பயிற்சி

அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் துவக்கிவைத்தார்

படித்தவர்களும் வேளாண்மைத் தொழிலில் அக்கறை காட்ட முன்வந்திருப்பதற்குப் பாராட்டு

சென்னை, அக். 6—

சென்னை -- கிண்டி தொழிற்பேட்டையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகத்தின் சார்பில் படித்து வேலையின்றி இருக்கும் பொறியர்கள் -- வேளாண்மைப் பட்டதாரிகள் -- தொழில் நுட்பப் பட்டதாரிகள் சொந்தமாக டிராக்டர் பழுது பார்த்தல், பூச்சி மருந்து தெளித்தல் போன்ற விவசாயத் தொழில்கள் தொடங்க அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு சென்னை --புட்னி (மத்தியப் பிரதேசம்), ஹிசார் (அரியானு) ஆகிய இடங்களில் விவசாயத் தொழில்களில் 4 மாதங்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இதில் முதல் அணியாக 17 பேர்களும், இரண்டாவது அணியாக 40 பேர்களும் இப்போது பயிற்சி பெறுகிருர்கள்.

கிண்டி தொழில்பேட்டையிலுள்ள விவசாய இல்லத்தில் இந்தத் திட்டத்தை வேளாண்மைத் துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் தொடங்கி வைத்துப் பேசுகையில் கூறியதாவது :—

"நம்முடைய நாட்டில் விவசாயத்திற்கு இப்போது முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது; ஒரு காலத்தில் விவசாயம் கேவலமான ஒரு தொழிலாகக் கருதப்பட்டது; அந்த நிலை மாறி, இன்று விவசாயத்தில் பசுமைப் புரட்சி ஏற்பட்டுள்ளது.

உணவுத் துறையில் நாம் தன்னிறைவு அடைந்தாலும், பருப்பு வகைகள் உற்பத்தியில் இன்னும் தட்டுப்பாடு இருந்துவருகிறது; விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் மூலம் அவற்றின் உற்பத்தியைப் பெருக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

விவசாயத் தொழிலில், பயிற்சி பெறுவதற்குப் படித்தவர்கள் முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்கு உரியது; பயிற்சி முடிந்ததும், விவசாயத் தொழில் நிலையங்கள் அமைப்பது மட்டுமன்றிக் கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு நவீன விவசாய முறைகள் பற்றியும், விளைச்சலைப் பெருக்குவதற்கான வழிமுறைகளையும், பூச்சிக்கொல்லி மருந்துகள் பற்றியும் இன்முகத்துடன் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

இந்தப் பயிற்சி திட்டம் உங்களுக்கும் பலன் தருவதோடு இல்லாமல் விவசாயத் தொழில்கள் வளரவும் ஏதுவாகிறது."

விவசாயத் தொழில்கள் இணையகம் புதிதாகக் கண்டுபிடித்துள்ள பி.எச்.சி. 10 சதவீதம் என்ற பூச்சிக் கொல்லி மருந்தையும் அமைச்சர் வெளியிட்டார்.

விழாவுக்கு தமிழ்நாடு விவசாயத் தொழில்கள் இணையகத்தின் தலைவர் கே. வி. சுப்பையா எம்.எல்.ஏ. தலைமை தாங்கினர்.

விவசாயத் துறை இயக்குநர் அந்தோணி, செயலாளர் பி. என். வேதநாராயணன் ஆகியோரும் பேசினர்.

விவசாயத் தொழில்கள் இணையக நிர்வாக இயக்குநர் வி. ராமமூர்த்தி வரவேற்றுப் பேசினர்.

பயிற்சித் திட்ட தலைமை அதிகாரி எஸ். எம். சுலைமான் நன்றி கூறினர்.

பம்பாய் தியாகராசன் மகள் திருமணம்

பம்பாய் தி. மு. க. செயலாளர் எஸ். தியாகராசன் அவர்களின் மகள் தேன்மொழிக்கும்—வெண்ணிலிங்கபுரம் திரு.மாடசாமி அவர்களின் மகன் சண்முகவேலுவுக்கும் வாழ்க்கை ஒப்பந்தவிழா திரு. கார்மேகசாமி தலைமையில் 4-9-72 ல் நடைபெற்றது! மணமக்களை வாழ்த்தி சாத்தூர் தி.மு.க. செயலாளர் பி. பாலகிருஷ்ணன் பேசினர்.

அன்று மாலை 6 மணி அளவில் சாத்தூரில் எஸ். அழகுத் தேவர் எம்.எல்.ஏ. தலைமையில் வரவேற்பு நடைபெற்றது; மணமக்களை வாழ்த்தி. பெ. கார்மேகச்சாமி, பி. பாலகிருஷ்ணன், கோ. வரதராஜன், நா. சுப்பிரமண்யம், எஸ். எஸ். உசேன், கோ. சொக்கலிங்கம், எஸ். பி. வேலாயுதம், யு. கே. வெள்ளச்சாமி, க. நடராசன், இரா. இராமச்சந்திரன், எம். மணி, எம். பொன்னையா, அ. பாலகிருஷ்ணன், து. முனியசாமி ஆகியோர் பேசினர்.

மணமக்களை வாழ்த்தி புரட்சி நடிகர் எம் ஜி.ஆர். வாழ்த்துத்தந்தி அனுப்பிவைத்தார்.

புத்தம் புதிய திட்டம்—
அத்தனையும் உங்களுக்கே!



1972 அக்டோபர் முதல்
அளிக்கப்படும்
பரிசுகளில் பரபரப்பூட்டும்
மாறுதல்கள்

மூன்று வரிசைகளுக்கு, மொத்தப் பரிசுகளும் பரிசுத் தோகையும் :

3	முதல் பரிசுகள்	ஒவ்வொன்றும் ரூ.	1,00,000	=	ரூ 3,00,000
6	இரண்டாவது பரிசுகள்	ஒவ்வொன்றும் ரூ.	10,000	=	ரூ. 60,000
225	மூன்ருவது பரிசுகள்	ஒவ்வொன்றும் ரூ.	1,000	=	ரூ. 2,25,000
300	நான்காவது பரிசுகள்	ஒவ்வொன்றும் ரூ.	500	=	ரூ. 1,50,000
1500	ஐந்தாவது பரிசுகள்	ஒவ்வொன்றும் ரூ.	100	=	ரூ. 1,50,000
3000	ஆருவது பரிசுகள்	ஒவ்வொன்றும் ரூ.	50	=	ரூ. 1,50,000

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு கீழ்க்கண்டபடி ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும்.

முதல் பரிசுக்கு	ஒவ்வொன்றும்	ரூ. 1500/- வீதம் 6 ஆறுதல் பரிசுகள்	= ரூ. 9000/-
இரண்டாவது பரிசுகளுக்கு	ஒவ்வொன்றும்	ரூ. 500/ வீதம் 12 ஆறுதல் பரிசுகள்	= ரூ. 6000/-

மொத்தப் பரிசுகள்: 5052

மொத்தப் பரிசுத் தொகை

ரூ. 10,50,000*

குலுக்கல் நாள்: 10—11—1972

பரிசு சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்

இன்றே வாங்குங்கள்

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9.

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2

* 3 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.

போக்குவரத்துத்துறை அமைச்சர்

ச. இராமச்சந்திரன்

நிகழ்ச்சிகள்

அக். 8 காலை 8-30 மணி : மதுராந்தகத்தில் நடைபெறும் திருமண நிகழ்ச்சியில் கலந்துகொள்ளல்; பிற்பகல் ; பண்ணுருட்டி.

அக். 9 காலை 5 மணி : மாளிகம்பட்டு திருமண நிகழ்ச்சியில் கலந்துகொள்ளல்: 10-30 மணி: கல்லங்குறிச்சி கலியுக வரதராச பெருமாள் கோவில் தேவஸ்தானம் வரவேற்பு -- சித்த மருத்துவமனை திறப்பு; 11-30 மணி: அரியலூர் டோபிகானு திறப்பு; மதியம் 12-மணி: திருமானூர் ஊராட்சி ஒன்றிய வரவேற்பும் -- விவசாயக் கிடங்குத் திறப்பு -- திருமானூர் கைலாசநாத சுவாமி திருக்கோயில் வரவேற்பு; மாலை 4-மணி: அரியலூர் ஆலந்துறையார் கோதண்டராமசுவாமி கோவில் தேவஸ்தான வரவேற்பு; 5-மணி: அரியலூர் ஊராட்சி ஒன்றியம் -- பேரூராட்சி மன்றம் வரவேற்பு; இரவு 7-மணி: ஆர். எஸ். மாத்தூர் — பொதுமக்கள் வரவேற்பு.

அக். காலை 10 மணி : திருச்சி—போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர்கள் ஆலோசனைக் குழுக் கூட்டம்; மாலை 5-30 மணி: முன்னாள் இராணுவத்தினர் கூட்டுறவுப் போக்குவரத்துக் கழகத்தைப் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் ஏற்றுக்கொள்ளும் விழா.

தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

என். வி. நடராசன்

நிகழ்ச்சிகள்

அக். 9 காலை 9 மணி: வலையமாதேவி—மேநிலை நீர்த் தேக்கத் தொட்டி திறப்பு; 10 மணி: தலைவாசல் — அரசினர் உயர்நிலைப் பள்ளிக் கட்டட அடிக்கல்நாட்டு விழா; 11-30 மணி: சிறுவாச்சூர்—அரசினர் உயர்நிலைப் பள்ளிக் கட்டட அடிக்கல்நாட்டு விழா; மாலை 4 மணி: சாத்தப்பாடி அரசினர் உயர்நிலைப் பள்ளிக் கட்டட அடிக்கல்நாட்டு விழா; 5-30 மணி: வீரனூர்—அரசினர் உயர்நிலைப் பள்ளிக் கட்டட அடிக்கல்நாட்டு விழா; 6 30 மணி: செங்கவல்லி—பொதுமக்கள் வரவேற்பு; இரவு 8 மணி: ஆத்தூர்—பொதுமக்கள் வரவேற்பு.

அக். 10 மாலை 5 மணி : பழையனூர்—குடிமனைப் பட்டா வழங்குதல; 6 30 மணி : திருத்தணி—சரசுவதி ஆலைத் தொழிற் சங்க 5-வது ஆண்டு விழா.

தாழ்த்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்

சத்தியவாணிமுத்து

நிகழ்ச்சிகள்

அக். 8 மாலை 6 மணி: சரனூர்—தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்ல முதலாண்டு விழாவில் பங்கு பெறுதல்.

அக். 9 காலை 10-30 மணி: மண்டபம்—மீன் தூள் நிலையத் துவக்க விழாவில் பங்கு பெறுதல; மாலை 5-30 மணி: பரமக்குடி—விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பட்டாப் புத்தகம் வழங்கும் நிகழ்ச்சியிலும், குளப்போவை நிலப்பட்டாக்கள் வழங்கும் நிகழ்ச்சியிலும் பங்கு பெறுதல்; இரவு 7 மணி: சிவகங்கை—பொதுக் கூட்டம்.

அக். 11 இரவு 7-30 மணி: தென்னேரி அகரம ஊராட்சி மன்ற ஆரிசன நலத்துறையால் கட்டப்பட்ட மேநிலை நீர்த் தேக்கத் தொட்டித் திறப்பு; 8-30 மணி: தென்னேரியில் நடைபெறும் அறிஞர் அண்ணா 64-வது பிறந்த நாள் விழாப பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளுதல்.

பொதுப்பணித் துறை அமைச்சர்

எஸ்.ஜே. சாதிக்பாட்சா

நிகழ்ச்சிகள்

அக். 8 காலை 10-30 மதுரை—சுப்பிரமணியபுரம் நெடுஞ்சாலை மேம்பாலம் திறப்பு; மாலை 4 மணி; பழனி—ஆயக்குடி கட்டப்பாறை சாலை மேம்பாட்டுப் பணித் துவக்க அடிக்கல் நாட்டுவிழா; மாலை 5 30 மணி: பாலார் அணை—அண்ணா பிறந்த நாள் விழா.

வருவாய்த் துறை அமைச்சர்

ப. உ. சண்முகம்

நிகழ்ச்சிகள்

அக். 8 காலை 9-மணி: குமாரபாளையம் — பேரூராட்சிமன்ற வரவேற்பு; 10-மணி: மோளசி—திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றிய ஆரம்ப சுகாதார நிலையத் திறப்பு-- ஊராட்சி ஒன்றிய வரவேற்பு -- வட்டார விவசாயிகள் வரவேற்பு; மதியம் 12 மணி: மாணிக்கம்பாளையம்—சீரணிப் பள்ளிக் கட்டடத் திறப்பு -- எளச்சிபாளைய ஒன்றிய வரவேற்பு; மாலை 4-மணி; பள்ளிப்பாளையம் — பேருந்து வண்டி நிலையம், பேரூராட்சிமன்ற அலுவலகம், உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் ஆகியவைகளின் அடிக்கல் நாட்டு விழாக்கள்; பேரூராட்சி மன்றம் -- ஒன்றியச் சார்பில் வரவேற்பு; இரவு 7-மணி: குமாரபாளையம் -- பொதுக்கூட்டம்.

அக். 9 காலை 10 30 மணி: மண்டபம்—மீன் தூள் நிலையம் துவக்க விழா; மாலை 5 30 மணி: ஏரமக்குடி—நில உடைமை குறிப்பேடு வழங்குதல் -- குளக் போர்வை பட்டா வழங்குதல்; இரவு 7-மணி: சிவகங்கை—பொதுக்கூட்டம்.

அக் 10 இரவு 7-30 மணி: குடியாத்தம்—பொதுக்கூட்டம்.

அக். 11 காலை 10-மணி: தண்டராம்பட்டு — குடிநீர்த் தொட்டித் திறப்பு.

அறநிலைய அமைச்சர்

மு. கண்ணப்பன்

நிகழ்ச்சிகள்

அக். 8 காலை: மதுரை — முதல்வர் கலைஞர் அவர்களுடன் மதுரை மாவட்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுதல்.

அக். 9 காலை 10-மணி: கல்லங்குறிச்சி கலியுக வரதராசப் பெருமாள் திருக்கோயில் வரவேற்பு -- சித்த மருத்துவமனை திறப்பு; 11-30 மணி: அரியலூர் டோபிகானு திறப்பு; மதியம் 12-மணி: திருமானூர் ஊராட்சி ஒன்றிய வரவேற்பு -- விவசாயக் கிடங்குத் திறப்பு -- திருமானூர் கைலாசநாதசாமி திருக்கோவில் வரவேற்பு; மாலை 4-மணி: அரியலூர்—ஆலந்துறையார், கோதண்டராமசுவாமி திருக்கோயில் வரவேற்பு; 5-மணி: அரியலூர் ஊராட்சி ஒன்றியம் -- பேரூராட்சி மன்றம் வரவேற்பு; இரவு 7 மணி: ஆர். எஸ். மாத்தூர் — பொதுமக்கள் வரவேற்பு.

அண்ணா பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள்

சென்னை 103 வது வட்டம்

தி. மு. க. சார்பில் அண்ணா பிறந்த நாள் விழா—கிளைக் கழகப் பணிமனைத் திறப்பு விழா; 8-10-72 காலை 9 30 மணியளவில் கோமதி நாராயணசாமி செட்டி ரோட்டில் (சன் தியேட்டர் அருகில்); தலைவர்: ச. அம்மனசாமி; முன்னிலை: கே. முருகேசன்; கொடியேற்றுபவர்: வை. பாலசுந்தரம் எம்.எல்.ஏ.; பணிமனைத் திறப்பாளர்: அமைச்சர் என். வி. நடராசன்; அண்ணா படத் திறப்பாளர்: நடிகமணி டி. வி. நாராயணசாமி எம்.எல்.சி.; பெயர் பலகைத் திறப்பாளர்: நீல நாராயணன் எம்.எல்.சி.; 3,000 பேருக்கு மு... சாலிமாறன் எம்.பி., உணவு வழங்குவார்; எஸ். ஏழுமலை, பி. மாரியப்பன், சா. கோவிந்தராசு, மா. தேசமுத்து, மு. மன்னன் மற்றும் பலர் பேசுவர்; மாலை 7 மணிக்கு தமிழ்ச் செல்வன் குழுவினரின் 'அண்ணாவின் வழி மாநில சுயாட்சி' எனும கலா நிகழ்ச்சி நடைபெறும்.

அருணாசலத்தின் தலைநகர்

ஷில்லாங், அக். 7

அருணாசலப் பிரதேசத்தின் ... நகருக்கு 'இந்திரகிரி' என்று பெயரிடப்படும்.

கமன்சிரி மாவட்டத்தில் மலையடிவாரத்தில் வந்தர்தேவா தார்சூலிப் பகுதியில் தலைநகரம் அமைக்கப்படும்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்காட்சிகள் நடத்துதல் -- விளம்பரம் செய்தல் ஆகியவைகளுக்காகும் செலவுகள் உட்பட ரூ. 1,500-க்குமேல் செலவு செய்யக்கூடாது.

"சிறப்பு மலர் வெளியிடுதல், அல்லது கண்காட்சிகள் போன்றவை மாநாட்டின் ஆதரவில் நடைபெறுவிட்டால் அந்த அளவு செலவு குறைக்கப்பட வேண்டும்"

என்று இதன் தொடர்பாக அரசு வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது.

தலைமைக் கழக அறிவிப்பு

ஒழுங்கு நடவடிக்கை

கழகத்தின் கண்ணியம் – ஒழுங்குமுறை ஆகியவைகளைக் குலைத்துக் கழகத்திற்கு இழுக்குத் தேடும் வகையில் நடந்துகொண்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள கீழ்க்காணும் இரு தோழர்களும், இன்றுமுதல் கழகத்தின் சாதாரண உறுப்பினராப் பொறுப்பு உட்பட அவரவர் தற்போது வகித்துவரும் எல்லாக் கழகப் பொறுப்புகளிலிருந்தும் தற்காலிகமாக விலக்கி (சஸ்பெண்டு) வைக்கப்படுகின்றனர்; இவர்கள் பேரில் முறைப்படி விரைவில் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

விலக்கிவைக்கப்படும் தோழர்கள் :—

1. கே. நாகராசன் (அவைத் தலைவர், பாபநாசம் வட்ட தி.மு.க.)
2. சி. கன்னையன் (பொருளாளர், திருச்சி வட்ட தி.மு.க.)

'அறிவகம்' சென்னை-13
4—10—1972

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

துறைமுகத் தொழிலாளர் பாதுகாப்பு வாரம்

சென்னை, அக். 7—

அக்டோபர் 9-ந் தேதி முதல் 14-ந் தேதி வரையில் துறைமுகத் தொழிலாளர் பாதுகாப்பு வாரம் பின்பற்றப்படும்; சென்னைத் துறைமுகத்தில் அக். 9-ந் தேதியன்று பிற்பகல் 2 30 மணிக்கு மக்கள் நலத்துறை அமைச்சர் க. அன்பழகன் அவர்கள் பாதுகாப்பு வாரத்தைத் துவக்கிவைப்பார்.

அக். 10, 11-ந்தேதிகளில் துறைமுகத் தொழிலாளர் பாதுகாப்பு பற்றி அனைத்திந்திய கருத்தரங்கு ஒன்று நடைபெறும்; ஆளுநர் கே. கே. ஷா துவக்கிவைப்பார்; இக் கருத்தரங்கில் 16 இந்திய நிபுணர்கள் தங்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படிப்பார்கள்.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மருந்துபோல் தருகின்ற கலை விருந்தாக அமைந்திருந்தது!

கலைவாணருக்கு தி. மு. கழகத்திடம் எவ்வளவு மதிப்பும், அண்ணாவிடம் எவ்வளவு பற்றும் பாசமும், பெரியாரிடம் எவ்வளவு பயபக்தியும் இருந்தது என்பதையெல்லாம் எண்ணிப்பார்த்தால், இன்றும் நம் உள்ளம் எல்லாம் உருகும்!

ஒரு காலத்தில், அண்ணாவுக்கும்--கலைவாணருக்கும் இடையே சிலர் கலகமூட்டினர்கள்; நல்லவேளையாக அவர்கள் இப்போது நம்மிடம் இல்லை -- வேறு கட்சிக்குப் போய்விட்டார்கள்; 'கலகமூட்டுபவர்கள் யாரும் இங்கே இருக்க முடியாது' என்பதற்கு அந்தக் காலத்திலேயே ஏற்பட்ட அருமையான உதாரணம் இது!

கலகமூட்டியவர்களின் செயலால், அண்ணாவும் -- கலைவாணரும் பேசாமல் இருக்கக்கூடிய நிலை கூட உருவாயிற்று; அந்த நிலையில், நாகர்கோவிலில் தி. மு. கழக மாநாடு நடைபெற்றது; நாகர்கோவில் கலைவாணர் பிறந்து--வாழ்ந்த ஊர்; இருந்தும், மாநாட்டை நடத்திய நண்பர்கள், கலைவாணரை அந்த மாநாட்டிற்கு அழைக்கவில்லை; அது மாத்திரமல்ல -- மாநாட்டும் பந்தல் போடப்பட்ட நேரத்தில், அந்தப் பந்தலைப் பார்வையிடக் கலைவாணர் சென்றபோது, அவரை உள்ளேவிட மறுத்துவிட்டார்கள்; 'அண்ணாவுக்கும் -- இவருக்கும் தகராறு; ஆகவே கலைவாணர் பந்தலைப் பார்க்கக் கூடாது' என்ற எண்ணத்தில் அப்படி மறுத்துவிட்டார்கள்; அப்படி மறுத்து -- கலைவாணரைப் புண்படுத்தியவர்கள் இன்று கழகத்தில இல்லை -- காங்கிரசுக் கட்சிககும் போய்விட்டார்கள்.

அப்படிப்பட்ட நேரத்திலும்கூட கலைவாணர் அதற்காக மனம் நோகாமல் -- வேதனைப்படாமல் -- வருந்தாமல், அண்ணா அவர்களும் -- நாவலர் அவர்களும் -- நானும் மற்றவர்களும் நாகர்கோவில் மாநாட்டிற்குச் சென்றபோது, எங்கள் அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்று -- அவருடைய இல்லத்திலேயே தங்க வைத்து விருந்தளித்ததுடன் மட்டுமல்லாமல் மாநாட்டும் பந்தல் முகப்புவரை வந்து வழியனுப்பினர்; நாங்கள் அவரை அழைத்தபோது, 'நான் மாநாட்டிற்கு வந்தால், இங்கே இருக்கின்ற உள்ளூர்க் கழகக்காரர்களுக்குக் கோபம் வரும்; ஆகவே வரவில்லை' என்று கூறிவிட்டுத் திரும்பிச் சென்ற பெருந்தன்மையைக் கலைவாணர் காட்டினர் -- அப்படிப்பட்ட பெருந்தன்மையை அவர் பெற்றிருந்தார்; 'அப்படிப்பட்ட நல்லவர், இன்று நம்மிடையே இல்லையே' என்ற ஏக்கம் நமக்கெல்லாம் இருக்கிறது!

அவருடைய உழைப்பு--நல்லெண்ணங்கள்--கொடை கொடுத்துப் பெற்ற பெயர்--புகழ்--ஏழை எளியவர்களுக்காக அவர் ஏற்றுக்கொண்ட சிரமங்கள்--வறுமையிலே சில நாட்கள் சிரமப்பட்ட நேரத்தில, 'நமக்காகப் பிறர் சிரமப்படக்கூடாது' என்பதற்காகப் பட்ட பாடு --இவைகளை நினைக்கின்ற நேரத்திலே, என்றென்றும் நம் நெஞ்சில நிலைத்திருக்கின்ற ஓர் ஆற்றலாளர்--பெரும கலைஞர்--பெரிய கலையுலக மேதை நம் முன்னே எழிலுடன் வருகிறார்-- நினைவில் நிலைத்து நிற்கிறார்!

அவருடைய நினைவாக 10 ஆண்டுக் காலமாக ஒரு மன்றம் அமைத்து நடத்துகின்ற நண்பர்கள், எந்த அரசியல் கட்சி வாழ வேண்டும்--வளர வேண்டும்--எந்த அண்ணாவின் கொள்கைகள் நாட்டில் நிலைபெற வேண்டுமென்று எண்ணினரோ--எப்படிப்பட்டவர்களைத் தன் நண்பர்களாகக் கருதினரோ அவர்களுடைய ஆட்சி இன்று நடைபெறுகின்ற நேரத்தில் நாம் அவரை நினைத்துக்கொள்வதும, அவரைப் போல தன்னலமற்ற பொதுநல எண்ணத்தோடு பாடுபட வேண்டுமென்று சூளுரை மேற்கொள்வதும் அவசியமாகும்!"

—கழகத் தலைவர் கலைஞர்

(கோட்டூர்புரம் என் எஸ். கே. மன்றச் சார்பில நடைபெற்ற அண்ணா பிறந்தநாள் விழாவில)

புண்பட்ட நேரத்திலும் கலைவாணர் பண்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

'சாதாரணமானவர்களான நாம், சாமானியமான மக்களுக்கு இவ்வளவு செய்திருக்கிறோமே' என்ற அகமகிழ்ச்சி ஏற்படுகிறது!

நாம் ஒன்றைக்கூடச் செய்யாமல் இருந்திருந்தால், 'இதை வைத்துக்கொண்டு மக்களிடம் பேசலாம்' என்று காமராசர் மகிழ்ச்சியடைந்திருப்பார்; 'இவர்களை எப்படியாவது அகற்றிவிடலாம்' என்று எண்ணியிருக்கக் கூடும்; ஆனால், 'இத்தனையையும் செய்து மக்கள் உள்ளத்திலே இடம் பெற்றுவிட்டார்களே' என்று எரிச்சலடைகிறார்!

'பொதுவாக, ஆளும் கட்சி என்றால் கூட்டம் குறையும்; அதற்கு மாறாக, இவர்களுக்குக் கூட்டம் அதிகமாகக் கூடுகிறதே' என்று நினைக்கிறார்!

விளம்பரப்படுத்தப்பட்ட நடிகர் வராததற்காகக் கூட்டம்கலைவது அங்கே!

விளக்கங்களைக் கேட்டுக் கொள்கை வழி நிற்பதற்குக் கூட்டம் சேருவது இங்கே! இதுவே இன்றைய நிலை!"

வேளாண்மைத் துறை அமைச்சர்

மன்னை நாராயணசாமி

நிகழ்ச்சிகள்

அக். 9 காலை : தஞ்சாவூர்; மாலை : நீடாமங்கலம்.

அக். 10 காலை ; மன்னார்குடி.

உணவு அமைச்சர்

ப. நாராயணசாமிக்கு வியாபாரிகள் வரவேற்பு

சென்னை நகர ரேசன் வியாபாரிகள் மத்திய செயற்குழு சார்பில் 8—10—72 மாலை 4 மணியளவில், சென்னை -- இராயப்பேட்டை நியூ உட்லண்ட்சு ஓட்டலில், உணவு அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி அவர்களுக்கு வரவேற்பு விழா நடைபெறும்; தலைவர்: சி. நவமணி; மேலவைத் துணைத் தலைவர் ம. பொ. சிவஞ்ஞானம், மு. வேதாசலம் எம்.எல்.ஏ., எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., நீலநாராயணன் எம். எல். சி., கேசவலால் காளிதாஸ் சேட், த. வெங்கடேசன் எம்.சி. ஆகியோர் பாராட்டு வழங்குவர்.